**அல்லாஹ்வின் கட்டளை**

فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍ بِشَهِيْدٍ وَّجِئْنَا بِكَ عَلٰى هٰٓؤُلَآءِ شَهِيْدًا

நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு சாட்சியைக் கொண்டு வரும்போதும், உம்மை அவர்களுக்குச் சாட்சியாகக் கொண்டு வரும்போதும் அவர்களின் நிலை எவ்வாறிருக்கும்? (4:42)

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ


தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 34

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

29 துல்ஹஜ்ஜா 1441 ஹிஜ்ரி கமரி 20 ஸஹூர் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
20 ஆகஸ்ட் 2020


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இறையச்சமுடையவர் இறைவனை நோக்கி செல்லும்போது உலகம் அவரை சுயமே பின் தொடரும். பாருங்கள். நபித்தோழர்கள் உலகத்தை விட்டு விட்டார்கள். மேலும் அவர்கள் உலகில் மாபெரும் செல்வந்தர்களாகவும் திகழ்ந்தார்கள். எதிர்காலத்தின் கனிகளையும் சுவைத்தார்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**14 ஜனவரி 1898**

நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் அச்சத்தின்கீழ் சாட்சிகள் ஆளாக்கப்படுகிறார்கள் என்பது தொடர்பாக கூறப்பட்டு வந்தது. அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நீதிமன்றங்களில் சாட்சிகளின் மீது ஆட்சியாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் எந்த அளவுக்கு திகிலை ஏற்படுத்துகின்றார்கள் என்றால் மனிதர்களின் உரிமைகளை பாதுகாப்பதே இல்லை என தெரிகிறது. மேலும் எப்படிப்பட்ட வீணான மற்றும் தவறான வார்த்தைகள் அவர்களின் வாயிலிருந்து வெளி வருகிறது என்றால் அதன் மூலம் அநீதி பிறக்கின்றது. நீதிமன்றங்களின் திகிலும் ஒரு வகையான (ஷிர்க்) இணை வைத்தலே ஆகும்.

நிச்சயமாக இணை வைப்பதும் மாபெரும் அநீதியாகும். சில ஆங்கிலேயர்கள் வழக்குகளில் தீர்ப்பளிக்கும்போது நன்றாக விசாரித்து ஆய்வு செய்து மேலும் நன்கு ஆழமாக ஆராய்ந்து சிந்தித்து தீர்ப்பை வழங்குவார்கள். எதிர்பாராத வண்ணம் நான் என்னுடைய தந்தை மிர்ஸா சாஹிப் அவர்களுடைய காலகட்டத்தில் ஜமீன்தார்களுடன் ஒரு வழக்கு தொடர்பாக அமிர்தரஸில் ஆணையாளரின் நீதிமன்றத்திற்கு சென்றிருந்தேன். தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு நாள் முன்பாக ஆணையாளர் ஜமீன்தார்கள் மீது மிகவும் சலுகை செய்தவாறு அவர்களின் தீய செயல்களை கருத்தில் கொள்ளாமலேயே நீதிமன்றத்தில் இந்த மக்கள் ஏழை ஆவார்கள். நீங்கள் இவர்கள் மீது அநீதி இழைக்கின்றீர்கள் என அவர்களுக்கு சாதகமாக கூறினார்.

அந்த இரவில் நான் கனவில் பார்க்கின்றேன். அந்த ஆங்கிலேயர் ஒரு சிறிய குழந்தை வடிவில் என் அருகில் நிற்கிறார். நான் அவருடைய தலை மீது கையை தடவுகிறேன். காலையில் நாங்கள் நீதிமன்றத்திற்கு சென்றபோது அவருடைய நிலையில் எப்படிப்பட்ட ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது என்றால் அவர் முன்னர் இருந்த ஆங்கிலேயராகவே இல்லை. அந்த ஆணையாளர் ஜமீன்தார்களை கடுமையாக ஏசினார். மேலும் நம்முடைய ஹக்கில் தீர்ப்பை வழங்கினார். அதுமட்டுமல்லாமல் நம்முடைய அனைத்து போக்குவரத்து செலவுகளையும் பெற்றுத் தந்தார்.

ஆட்சியாளர்கள் மார்க்கத்தில் உள்ள ஒரு அங்கமாக கருதப்பட வேண்டும் என்றால் அவர்கள் எவருடைய உரிமையையும் பறிபோகாத அளவிற்கு நன்கு ஆய்வு செய்ய வேண்டும். பாருங்கள். மனிதன் நிரந்தரத்தன்மை மற்றும் பணிவான இயல்புகளை மேற்கொள்ளாவிட்டால் இந்த உலக ஆட்சியாளர்களுக்கு முன்னால் நிற்பதே கடினமானதாக இருக்கும்போது ஆட்சியாளர்களுக்கு எல்லாம் ஆட்சியாளனாக இருக்கக்கூடிய அந்த இறைவனின் முன்னால் நிற்கக்கூடிய நேரத்தில் இவர்களின் நிலை எவ்வாறு இருக்கும்.

அன்னார் கூறினார்கள்: தவ்ராத்தின் பார்வையில் விபச்சாரத்தின் வித்தானது சாபத்திற்குரியதாகும். அதேபோன்று எவர் சிலுவையில் மரணிப்பாரோ அவரும் சாபத்திற்குரியவர் ஆவார். கிறித்தவர்கள் தங்களின் ஈடேற்றத்திற்காகவும், தங்களின் பாவ மன்னிப்புக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்காகவும் இயேசு சிலுவையில் அறையப்பட்டு சாபத்திற்குரிய மரணத்தை அடைந்தார் என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஒரு சாபத்தை அவர்கள் இயேசுவிற்காக நடைமுறைப்படுத்தியபோது இரண்டாவது சாபத்தையும் ஏன் அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை.

அவ்வாறு நடைமுறைப்படுத்தி இருந்தால் பாவ மன்னிப்புக் கொள்கையானது மிகவும் வலுவடைந்திருக்கும். சாபம் என்ற வார்த்தை வந்த பிறகு ஒன்றென்ன, இரண்டென்ன? ஆனால் திருக்குர்ஆன் இந்த இரண்டு சாபங்களையும் ரத்து செய்து அதற்கான அந்த பதிலையும் வழங்கியுள்ளது. அன்னாரின் பிறப்பும் தூய்மையானது. அன்னாரின் இறப்பும் சாதாரண மக்களின் மரணம் போன்றே நிகழ்ந்தது. சிலுவையில் அல்ல.

இறையச்சமுடையவர் இறைவனை நோக்கி செல்லும்போது உலகம் அவரை சுயமே பின் தொடரும். ஆனால் உலகவாதி உலகத்திற்காக பல இன்னல்களையும், துன்பங்களையும் மேற்கொள்கின்றான். அப்படி இருந்தும் அவன் உலகத்தின் மீது திருப்தி அடைவதில்லை. பாருங்கள். நபித்தோழர்கள் உலகத்தை விட்டு விட்டார்கள். மேலும் அவர்கள் உலகில் மாபெரும் செல்வந்தர்களாகவும் திகழ்ந்தார்கள். எதிர்காலத்தின் கனிகளையும் சுவைத்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 132,133 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**யூதர்களிலிருந்து பத்து நபர்கள் என்மீது ஈமான் கொண்டு விட்டால் பிறகு இந்த முழு சமுதாயமும் என்னை ஏற்றுக் கொள்ளும். மேலும் இறை தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் என்று என்னால் இறைவன் மீது நம்பிக்கை வைக்க முடியும்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியும், இஸ்லாத்தின் தோற்றுனர் (ஸல்) அவர்களின் மிகவும் நேசத்திற்குரியவரும், மிகவும் கலப்பற்ற, பற்றுணர்வுமிக்க மற்றும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் முஅஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**அஹ்ஸாப் போரின்போது பனூ குரைலாவின் ஏமாற்றுதல் மற்றும் இறை நியதிக்கேற்ப அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பான சம்பவத்தின் விரிவான விளக்கம்**

**கானாவின் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ் மதிப்பிற்குரிய ஹாஜியா காலித் சாஹிபா, மதிப்பிற்குரிய முபல்லிக் ஷேக் முபாரக் அஹ்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ஆஸிஃபா பேகம் சாஹிபா, வக்ஃபே ஜதீதின் ஓய்வுபெற்ற முஅல்லிம் மதிப்பிற்குரிய அலி அஹ்மது சாஹிப் பட் மற்றும் மதிப்பிற்குரிய ரஃபீகா பீபீ சாஹிபா ஆகிய நான்கு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக்கூறினார்கள்**

**மேலும் சில மர்ஹூம்களான மதிப்பிற்குரிய நாஸிர் சயீத் சாஹிப், மதிப்பிற்குரிய குலாம் முஸ்தஃபா சாஹிப், டாக்டர் பீர் முஹம்மது நக்யுத்தீன் சாஹிப் மற்றும் இந்தோநேஷியாவின் முபல்லிக் மதிப்பிற்குரிய ஸுல்ஃபிகார் அஹ்மது தாமாக் சாஹிப் ஆகியோரது ஜனாஸா காயிப் தொழுகையையும் ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஜுலை 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் கூறப்பட்டதுபோன்று அஹ்ஸாப் போருக்குப் பிறகு பனூ குரைலாவினுடைய நயவஞ்சகத்தின் தண்டனை குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவனுடைய கட்டளை வந்தது. பிறகு பனூ குரைஸா போரை நிறுத்தி ஹஸ்ரத் சஅத் அவர்களின் மூலமாக தீர்ப்பு வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தார்கள். ஆகவே சஅத் அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். இந்த போரைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

அஹ்ஸாப் போருக்குப் பிறகு ஏறக்குறைய 20 நாட்களுக்குப் பிறகு முஸ்லிம்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் பனூ குரைலாவினுடைய விவகாரம் தீர்ப்பு காணப்பட வேண்டியதிருந்தது. கண்டும் காணாமல் விட்டுவிடக்கூடிய அளவுக்கு அவர்களுடைய நயவஞ்சகம் இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்த உடனேயே தமது சஹாபாக்களைப் பார்த்து வீடுகளில் ஓய்வெடுக்க வேண்டாம். மாறாக மாலை நேரத்திற்கு முன்பே பனூ குரைலாவினுடைய கோட்டைகளை நோக்கி வந்து விடுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களை பனூ குரைலாவிடம் அனுப்பி வைத்து, அவர்கள் உடன்படிக்கைக்கு எதிராக இவ்வாறு நயவஞ்சம் ஏன் செய்தார்கள்? என கேட்டு வரச் சொன்னார்கள். பனூ குரைலாவினர் வருத்தம் தெரிவிப்பத்தை விட்டு விட்டு அல்லது மன்னிப்பு கோருவதை விட்டு விட்டு அவர்கள் ஹஸ்ரத் அலி மற்றும் அவருடன் சென்றவர்களை ஏசிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரது குடும்பத்து பெண்களை ஏச ஆரம்பித்து விட்டார்கள். மேலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியாது. அவருடன் நாங்கள் எந்த உடன்படிக்கையும் செய்யவில்லை என்றும் கூறினார்கள்.

இதைக்கேட்டு விட்டு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுடன் யூதர்களின் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். யூதர்கள் மிக மோசமாக ஏசிக் கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவிகள் மற்றும் பெண் பிள்ளைகளைப் பற்றி அசுத்தமான சொற்களால் ஏசிக் கொண்டிருந்தார்கள்.

இந்த சொற்களை கேட்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளம் துன்பப்படும் என நினைத்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாரிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நீங்கள் ஏன் கஷ்டப்படுகின்றீர்கள்? நாங்களே இந்த போருக்கு போதுமானவர்கள். நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அம்மக்கள் என்னை ஏசுவது எனக்கு புரிகிறது. அவை எனது காதில் விழ வேண்டாம் என நீங்கள் எண்ணுகிறீர்களா? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஆம் யா ரஸூலல்லாஹ்! விஷயம் இதுதான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் ஏசுவதால் என்னவாகிவிடப் போகிறது? மூஸா நபியோ அவர்களைச் சார்ந்தவர். இதைவிட அதிகமாக அவருக்கு அம்மக்கள் துன்பம் கொடுத்தனர். இதைக் கூறியவாறே அன்னார் யூதர்களின் கோட்டையை நோக்கி சென்றார்கள். ஆனால் யூதர்களோ கோட்டை வாயிலை அடைத்துவிட்டு உள்ளே இருந்தார்கள். மேலும் முஸ்லிம்களுடன் சண்டையிட துவங்கினர். எந்த அளவுக்கு என்றால் அவர்களின் பெண்கள் கூட சண்டையில் கலந்து கொண்டனர். கோட்டை மதிலின் கீழ் சில முஸ்லிம்கள் அமர்ந்திருந்தனர். யூத பெண்ணொருத்தி மேலிருந்து கல்லை எறிந்து ஒரு முஸ்லிமை கொன்று விட்டாள்.

சில நாள் முற்றுகைக்குப் பிறகு நீண்ட காலம் எதிர்த்து நிற்க முடியாது என யூதர்கள் உணர்ந்து கொண்டனர். அப்பொழுது அவர்களின் தலைவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தங்களுடைய நண்பரும், அவ்ஸ் கோத்திரத்தின் தலைவருமான அபூ லுபாபா அன்ஸாரியுடன் தாங்கள் ஆலோசனை செய்யும் பொருட்டு அவரை தங்களிடத்தில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ லுபாபாவை அனுப்பி வைத்தார்கள். அவரிடத்தில் யூதர்கள் ஆலோசனை கேட்டார்கள். தீர்ப்பை என்னிடத்தில் விட்டு விட்டு ஆயுதங்களை கீழே போடும்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்களே. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவா? என ஆலோசனை கேட்டார்கள். அபூ லுபாபா நாவினால் ஆம் என்று பதில் அளித்தார்கள். ஆனால் கொலை செய்யப்படுவதைப் போன்று தமது கைகளைக் கொண்டு தலையை சீவிக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்கள் அப்போது வரை தமது முடிவை யாரிடமும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அபூ லுபாபா அவர்கள் தமது உள்ளத்தில் என்ன நினைத்தார்கள் என்றால் யூதர்கள் செய்த இவ்வாறான குற்றத்திற்கு மரண தண்டனையை தவிர வேறு என்ன இருக்க முடியும்? என நினைத்தவாறு சிந்திக்காமல் சைகை மூலமாக அவர்களுக்கு ஒரு விஷயத்தை கூறிவிட்டார்கள். இது பனூ குரைலா கோத்திரத்தின் அழிவுக்கு காரணமாகிவிட்டது.

ஆகவே யூதர்கள் நாங்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என கூறி விட்டார்கள். அவர்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக யூதர்களின் பிற கோத்திரங்களைப் போன்று அவர்கள் மதீனாவை விட்டு நாடு கடத்தப்பட்டிருப்பார்கள்.

ஆனால் அவர்களின் துரதிஷ்டம் என்னவென்றால், அவர்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. மாறாக எங்களது நட்புக் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் சஅத் பின் முஆஸ் அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வோம் என கூறினார்கள். அவர்கள் என்ன தீர்ப்பு கொடுக்கிறார்களோ அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் எனக் கூறினார்கள்.

ஆனால் அப்பொழுது யூதர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. யூதர்களில் சிலர், நமது சமுதாயம் துரோகம் இழைத்துள்ளது. முஸ்லிம்களின் நடவடிக்கைகளிலிருந்து அவர்களின் மார்க்கம் உண்மை என நிரூபணமாகிறது என கூறினார்கள். இவர்கள் தமது மார்க்கத்தை துறந்து முஸ்லிம்களாகி விட்டனர். கருத்து வேறுபாடு கொண்டவர்களுள் அம்ர் பின் சவ்தா என்ற ஒருவரும் இருந்தார். அவர் அந்த சமுதாயத்தின் தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

அவர் தமது சமுதாயத்தை பழித்துரைத்தவாறு, நீங்கள் துரோகம் செய்துள்ளீர்கள், உடன்படிக்கையை மீறியுள்ளீர்கள். இப்பொழுது முஸ்லிமாகி விடுங்கள் அல்லது வரி செலுத்த ஆயத்தமாகுங்கள் என்று கூறினார். அதற்கு அவர்கள், நாங்கள் முஸ்லிமாகவும் மாட்டோம்; வரியும் செலுத்தவும் மாட்டோம். இதை விட கொல்லப்படுவதே மேல் என்று கூறினார்கள்.

அப்பொழுது அவர் உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று கூறி விட்டார். அதாவது அவர்களுக்கு புரிய வைக்கப்பட்டது. அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர் உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை. நான் உங்களுடன் இல்லை என்று கூறி விட்டார். இவ்வாறு கூறியவாறு அவர் கோட்டையை விட்டு வெளியேறிவிட்டார். அவர் கோட்டையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும்போது முஸ்லிம்களின் ஒரு படைப்பிரிவு அவர்களை பார்த்து விட்டது. அப்படைக்கு முஹம்மது பின் மஸ்லமா அவர்கள் தளபதியாக இருந்தார்கள். அது யார்? என கேட்கப்பட்டபோது, நான் இன்ன நபராவேன் என்று கூறினார். அப்போது முஹம்மது பின் மஸ்லமா அவர்கள், நீங்கள் நலத்துடன் சென்று விடுங்கள் என்று கூறினார்கள்.

முஹம்மது பின் மஸ்லமா அவர்கள் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள். இறைவா! நல்லவர்களின் தவறுகளின் மீது திரையிடக்கூடிய நற்செயல்களிலிருந்தும் என்னை விலக்கி வைக்காதிருப்பாயாக. அதாவது இவர் தனது செயலின் காரணமாக, தனது சமுதாயத்தின் செயலின் காரணமாக வருந்திக் கொண்டிருக்கின்றார். எங்களுடைய தார்மீக கடமை என்னவென்றால், அவரை மன்னித்து விட வேண்டும். ஆகவே நான் அவரை கைது செய்யவில்லை. அவரை செல்ல விட்டு விட்டேன். இறைவன் எப்பொழுதும் எனக்கு இவ்வாறான நற்காரியங்களை செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கிக் கொண்டே செல்வானாக.

எவ்வித அநீதிக்கான எண்ணமும் இல்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இச்சம்பவம் குறித்து தெரிய வந்தபோது அன்னார் முஹம்மது பின் மஸ்லமா அவர்களை கண்டிக்கவில்லை. நீங்கள் ஏன் அந்த யூதரை விட்டு விட்டீர்கள் என்று கேட்கவில்லை. இந்த செயலை பாராட்டினார்கள். நீங்கள் நல்லதை செய்துள்ளீர்கள் என பாராட்டினார்கள். இந்த சம்பவங்களெல்லாம் தனிப்பட்ட சம்பவங்களாகும். ஒட்டுமொத்த சமுதாயம் என்ற அடிப்படையில் பனூ குரைலா தமது பிடிவாதத்தில் நிலை நின்றது. ஒரு சில சம்பவங்கள் இவ்வாறு நடைபெற்றது. சிலர் பனூ குரைலாவின் முடிவில் மாற்றுக் கருத்துக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களிடம் ஒப்பந்தம் செய்ய வேண்டும்; முஸ்லிம்களின் பேச்சைக் கேட்க வேண்டும் என விரும்பினார். ஆனால் இவையெல்லாம் தனிப்பட்ட சம்பவங்களாகும்.

ஒட்டுமொத்த சமுதாயம் என்ற அடிப்படையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையை ஏற்க மாட்டோம் என பனூ குரைலா பிடிவாதத்தில் இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையை ஏற்க மாட்டோம் என கூறியதுடன் சஅத் அவர்களின் தீர்ப்பையே ஏற்றுக் கொள்வோம் என பிடிவாதம் பிடித்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை விரும்பவில்லை. அன்னாரை நீதிபதியாக நியமிக்க விரும்பவில்லை. மாறாக சஅத் எங்களுடைய தீர்ப்பைக் கூறுவார் என கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்கள். போரில் காயமுற்ற சஅத் (ரலி) அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உங்களுடைய தீர்ப்பை பனூ குரைலா ஏற்றுக் கொள்ளும். ஆகவே நீங்கள் வந்து தீர்ப்பு கொடுங்கள் எனக் கூறப்பட்டது. இது குறித்து அறிவிக்கப்பட்ட உடனே பனூ குரைலாவுடன் நீண்ட காலமாக நட்பில் இருந்த அவ்ஸ் கோத்திரத்தினர் சஅத் அவர்களிடம் ஓடினார்கள். கஸ்ரஜ் கோத்திரத்தினர் தனது நண்பர்களான யூதர்களை எப்பொழுதும் தண்டனையிலிருந்து காப்பாற்றி வந்துள்ளனர். ஆகவே நீங்களும் உங்களுடைய நட்புக் கோத்திரத்திற்கு சாதகமாக தீர்ப்பு கொடுக்கள் என வலியுறுத்தினர்.

சஅத் அவர்கள் காயமுற்றதின் காரணமாக சவாரியில் பயணம் செய்து பனூ குரைலாவை நோக்கி கிளம்பினர். அவர்களுடைய

சமுதாய மக்கள் அவருக்கு வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் ஓடிக்கொண்டே வந்தனர். பனூ குரைலாவுக்கு எதிராக தீர்ப்பு கூறிவிட வேண்டாம் என வலியுறுத்தி வந்தனர். ஆனால் சஅத் அவர்கள் அம்மக்களிடம், எவரிடம் தீர்ப்பு வழங்குவதற்கான பொறுப்பு கொடுக்கப்படுகிறதோ அவர் அமானிதத்தை பேணக் கூடியவராக இருக்கிறார். அவர் நேர்மையுடன் தீர்ப்பு வழங்க வேண்டும். ஆகவே நான் நேர்மையுடன் தீர்ப்பு வழங்குவேன் என்று கூறினார்.

சஅத் அவர்கள் யூதர்களின் கோட்டையை அடைந்தபோது அங்கு பனூ குரைலா கோட்டையின் மதிலில் நின்று கொண்டு சஅத் அவர்களின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தனர். இன்னொருபுறம் முஸ்லிம்கள் அமர்ந்திருந்தனர். முதலில் சஅத் அவர்கள் தமது சமுதாயத்திடம், நான் கூறக்கூடிய தீர்ப்பை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்களா? இதற்காக நீங்கள் வாக்குறுதி தருகின்றீர்களா? எனக் கேட்டார்கள். அவர்கள், ஆம் என கூறினார்கள். பிறகு சஅத் அவர்கள் பனூ குரைலாவிடம், நான் கூறக்கூடிய தீர்ப்பை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்களா? இதற்காக நீங்கள் வாக்குறுதி தருகின்றீர்களா? எனக் கேட்டார்கள். அவர்களும், ஆம் எனக் கூறினார்கள்.

பிறகு வெட்கி தலைகுனிந்தவாறு இன்னொரு பக்கம் பார்த்தவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்த திசையை சுட்டிக் காட்டியவாறு பார்வையை தாழ்த்தி அவர்களை நோக்கி, இங்கு இருக்கக்கூடிய மக்களும் வாக்குறுதி தருகின்றீர்களா? எனக் கேட்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்த திசையை ஏறெடுத்து அவர்கள் பார்க்க மாட்டார்கள். வெட்க உணர்வு இருந்தது. அதனால் பார்க்கவில்லை. ஆனால் தீர்ப்பு கூற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆகவே கேட்கவும் வேண்டியதிருந்தது. எனவே பார்வையை தாழ்த்தியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்த திசையை நோக்கி, நீங்களும் வாக்குறுதி தருகிறீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் எனக் கூறினார்கள்.

மூன்று பேரிடமும் வாக்குறுதி வாங்கிய பிறகு சஅத் அவர்கள், பைபிளின் கட்டளைக்கேற்ப இந்த தீர்ப்பை வழங்கினார்கள். பைபிளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

நீங்கள் ஒரு நகரத்தைத் தாக்கச் செல்லும்போது, முதலில் அந்த நகர ஜனங்களுக்கு சமாதானம் கூற வேண்டும். அவர்கள் உங்கள் சமாதானத்தை ஏற்றுக் கொண்டால், அவர்களது வாசல்களைத் திறந்து விடுங்கள். பின், அந்நகரத்தின் எல்லா ஜனங்களும் உங்களது அடிமைகளாகி விடுவதுடன், உங்களுக்காக ஊழியம் செய்ய முன் வருவார்கள்.

ஆனால் அந்த நகரத்து ஜனங்கள் உங்களோடு சமாதானம் செய்ய மறுத்து உங்களை எதிர்த்து சண்டையிட்டால், நீங்கள் அந்த நகரத்தை முற்றுகையிடுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் அந்நகரை கைப்பற்ற உங்களை அனுமதிக்கும்போது, நீங்கள் அங்குள்ள ஆண்கள் அனைவரையும் கொல்ல வேண்டும். ஆனால் நீங்கள் அங்குள்ள பெண்கள், குழந்தைகள், மாடுகள் ஆகியவற்றைக் கொல்லாமல் உங்களுக்காக அந்நகரிலுள்ள எல்லாப் பொருட்களையும் எடுத்து அனுபவிப்பீர்களாக. அந்த எல்லாப் பொருட்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகவே இவற்றையெல்லாம் கொடுத்துள்ளார். நீங்கள் வசிக்கின்ற நகரங்களையுடைய இந்த தேசத்தை விட்டு வெகு தூரத்திலுள்ள எல்லா நகரங்களிலும் இவ்வாறே செய்வீர்களாக.

உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு தருகின்ற தேசத்தில் நீங்கள் எடுத்துக் கொள்ளப் போகிற நகரங்களில் இருக்கின்ற ஒவ்வொருவரையும் கொன்று விட வேண்டும். அங்குள்ள ஜனங்கள் இனங்களான ஏத்தியர், எமோசியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் ஆகியவற்றை முழுமையாக அழித்துவிட வேண்டும். உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் இதைச் செய்ய கட்டளையிட்டுள்ளார். ஏனென்றால் அவர்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு எதிராக உங்களை எந்தவொரு பாவத்தையும் செய்யக் கற்றுக் கொடுக்க முடியாது. அவர்கள் பொய்த் தெய்வங்களைத் தொழுது கொண்ட அந்த அருவருப்பான செயல்களில் எந்த ஒன்றையும் உங்களை செய்யுமாறு கற்றுக் கொடுக்க இயலாத வண்ணம் அவர்களை அழிக்க வேண்டும்.

(இஸ்தஸ்னா, அதிகாரம் 20 வசனம் 10–17)

ஹஸ்ரத் சஅத் அவர்கள் பைபிளின் இந்த சொற்களைப் படித்தார்கள். மேலும் இதற்கு ஏற்ப தீர்ப்பு கொடுத்தார்கள். பைபிளின் இந்த தீர்ப்பிலிருந்து தெரியவருவது என்னவென்றால், யூதர்கள் வெற்றியடைந்து ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோல்வியடைந்திருந்தால் பைபிளின் இந்த தீர்ப்புக்கேற்ப, முதலில் எல்லா முஸ்லிம்களும் கொல்லப்பட்டிருப்பார்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டிருப்பார்கள்.

வரலாற்றிலிருந்து தெரியவருவதுபோன்று, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரையும் ஒரேயடியாக கொன்றுவிட வேண்டும் என அவர்கள் எண்ணம் கொண்டிருந்தார்கள். அவர்கள் பெரும் சலுகை காட்டியிருந்தால் கூட அப்பொழுதும மேற்குறிப்பிட்ட உபாகமம் அதிகாரத்தின் தீர்ப்புக்கேற்ப அவர்கள் வெகுதூரத்தில் உள்ள தேசங்களில் வசிக்கும் சமுதாயத்துடன் நடந்து கொள்வதைப் போன்றே நடந்து கொள்வார்கள். எல்லா ஆண்களையும் கொலை செய்திருப்பார்கள். பெண்களையும், பிள்ளைகளையும், பொருட்களையும் கொள்ளையடித்திருப்பார்கள்.

சஅத் அவர்கள் பனூ குரைலாவின் கூட்டாளியாக இருந்தார்கள். மேலும் அவர்களின் நண்பர்களுள் ஒருவராக இருந்தார்கள். நிச்சயமாக யூதர்களின் உயிரை பாதுகாக்கக்கூடிய இஸ்லாமிய ஷரீஅத்திற்கேற்ப ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை யூதர்கள் ஏற்க மறுத்தபோது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் உபாகமம் அதிகாரத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களுக்காக ஏற்கனவே விட்டுச் சென்ற அதே தீர்ப்பை யூதர்களுக்காக கூறினார்கள்.

மேலும் இந்த தீர்ப்பிற்கான பொறுப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதோ, முஸ்லிம்கள் மீதோ கிடையாது. மாறாக, இது அவர்களின் வேதத்திற்கேற்ப கொடுக்கப்பட்ட தீர்ப்பாகும். மூஸா

## திருக்குர்ஆனிலிருந்து...

கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்தப்பயமும் ஏற்படாது; அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். அவர்கள் நம்பிக்கை கொண்டு (எப்போதும்) இறைவனுக்கு அஞ்சுபவர்களாயிருக்கின்றனர். அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் (இறைவனிடமிருந்து) நற்செய்தி உள்ளது. அல்லாஹ்வின் திருவசனங்களில் எந்த மாற்றமும் இல்லை. அந்த மாபெரும் வெற்றி இதுவேயாகும். (10:63–65)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

(அலை) அவர்களின் மீதும், தவ்ராத்தின் மீதும், ஆயிரக்கணக்கான வருடங்களாக பிற சமுதாயங்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளும் அந்த யூதர்களின் மீதும் இதன் பொறுப்பு விழுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணைக்காக அவர்களை அழைத்தபோது அவர்கள் மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பேச்சைக் கேட்போம் எனக்கூறி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் அவர்கள் மூஸா (அலை) அவர்களின் தீர்ப்புக்கேற்ப தீர்ப்பு வழங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அநீதியிழைத்து விட்டார் என இன்று கிறிஸ்தவ உலகம் கூச்சலிடுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்ற ஏதேனும் சம்பவத்தில் அநீதி ஏன் இழைக்கவில்லை என கிறிஸ்தவ எழுத்தாளர்கள் ஏன் பார்ப்பதில்லை. மற்ற தருணங்களில் அநீதி எதுவும் தென்படுவதில்லை. நூற்றுக்கணக்கான முறை எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணையால் தன்னை விடுவித்துக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை மன்னித்து விட்டுள்ளார்கள்.

ஆனால் இந்த ஒரு சந்தர்ப்பத்தில் அந்த எதிரிகள், நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மாட்டோம்; இன்ன நபருடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வோம் என பிடிவாதம் பிடித்தனர். தீர்ப்பு வழங்கிய அந்த நபரோ தீர்ப்பிற்கு முன்பு, நான் கூறும் தீர்ப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வாக்குறுதி வாங்கி விடுகிறார்.

வரலாற்றிலிருந்து தெரிய வருவதுபோன்று, அன்னாரிடமும் உறுதிமொழி வாங்கப்பட்டது. அதன் பிறகு அந்த நபர் தீர்ப்பு கூறினார். அவர் தனது தீர்ப்பை கூறவில்லை. மாறாக, மூஸாவின் தீர்ப்பை மீண்டும் எடுத்துரைத்தார். அவருடைய சமுதாயம் தாங்கள் யூதர்கள் என்று வாதிக்கின்றனர். யாராவது அநீதியிழைத்திருப்பார் என்றால், யூதர்களே தம்மீது அநீதியிழைத்துக் கொண்டனர் என்று கூற வேண்டும்.

அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். யாராவது அநீதியிழைத்திருப்பார் என்றால், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அநீதியிழைத்திருப்பார்கள். இவர்கள்தான் முற்றுகையிடப்பட்ட எதிரியைக் குறித்து இறைவன் புறமிருந்து கட்டளை பெற்று தவ்ராத்தில் இவ்வாறு போதனை வழங்கியுள்ளார்கள்.

இந்த சம்பவம் அநீதியென்றால், அந்த கிறிஸ்தவ எழுத்தாளர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை அநீதியாளராக ஆக்கியிருக்க வேண்டும். அதுமட்டுமின்றி தவ்ராத்தில் இவ்வாறான போதனையை வழங்கிய மூஸாவின் இறைவனை அநீதியாளனாக ஆக்கியிருக்க வேண்டும்.

அஹ்ஸாப் போர் முடிவடைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்றைக்குப் பிறகு முஷ்ரிக்கள் நம்மீது தாக்குதல் நடத்த மாட்டார்கள். இப்பொழுது இஸ்லாம் தாமாகவே அவர்களுக்கு பதிலடி கொடுக்கும். நம்மீது தாக்குதல் தொடுத்த சமுதாயங்களின் மீது இப்பொழுது நாம் தாக்குதல் தொடுப்போம் என்றார்கள். ஆகவே இவ்வாறே நடைபெற்றது. அஹ்ஸாப் போரில் காஃபிர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டது? சிலர் கொல்லப்பட்டனர். அந்த காஃபிர்கள் அடுத்த வருடம் மீண்டும் ஆயத்தமாகி போர் தொடுக்க வர இயலும். இருபதாயிரத்திற்கு பதிலாக நாற்பதாயிரமோ அல்லது ஐம்பதாயிரம் படை வீரர்களையோ அவர்களால் கொண்டு வர இயலும்.

மாறாக, அவர்கள் இன்னும் அதிக ஏற்பாடுகளை மேற்கொண்டால் ஒரு இலட்சமோ ஒன்றரை இலட்சமோ படை வீரர்களை அழைத்து வருவது அவர்களுக்கு கஷ்டமான காரியமல்ல. ஆனால் 21 வருட தொடர் முயற்சிக்குப் பிறகு காஃபிர்களின் உள்ளங்கள் உணர்ந்து கொண்ட விஷயம் என்னவென்றால், இறைவன் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடன் இருக்கிறான். அவர்களின் சிலைகள் பொய்யானவையாகும். உலகத்தை படைத்தது ஒரே இறைவன் ஆவான். அவர்களின் உடல்கள் நல்ல நிலையில் இருந்தன. ஆனால் அவர்களின் உள்ளங்கள் உடைந்து விட்டன. வெளிப்படையாக காஃபிர்கள் தமது சிலைகளுக்கு முன்னால் சிரம் பணிந்தனர். ஆனால் அவர்களின் உள்ளங்களில் லா இலாஹ இல்லலாஹ்வின் குரல் ஒலித்துக கொண்டிருந்தது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 282–287)

ஹஸ்ரத் அபூ சயீது குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளும் நிபந்தனையுடன் சிலர் கோட்டையிலிருந்து கீழே இறங்கி வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்களை கூப்பிட்டு அனுப்பினார்கள். அவர் ஒரு கழுதையின் மீது பயணித்து வந்தார்கள். அவர் கோட்டையின் அருகில் வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களில் சிறந்தவரை வரவேற்க எழுந்து நில்லுங்கள் என்றோ, அல்லது தமது தலைவரை வரவேற்க எழுந்து நில்லுங்கள் என்றோ கூறினார்கள்.

பிறகு அன்னார் (ஸல்) அவர்கள், சஅத்! இம்மக்கள் உமது தீர்ப்புக்காக கீழே இறங்கியுள்ளனர் என்று கூறினார்கள். அப்போது அவர், இவர்களை குறித்து நான் இவ்வாறு தீர்ப்பு வழங்குகிறேன் என்றால் இவர்களுள் போரிடக் கூடியவர்கள் கொல்லப்பட வேண்டும். அவர்களின் மனைவி மக்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றார். இதைக்கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் இறை விருப்பத்திற்கேற்ப தீர்ப்பு கூறினீர்கள் என்றோ அல்லது அரச தீர்ப்பு வழங்கியுள்ளீர்கள் என்றோ கூறினார்கள். அதாவது நீங்கள் அரசனைப் போல் தீர்ப்பு கொடுத்துள்ளீர்கள் என்று கூறினார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப்.... சஅத் பின் முஆஸ் ஹதீஸ் எண் 3804)

இது குறித்த மேற்கொண்ட விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் விளக்கியுள்ளார்கள். அதில் கூறப்பட்டுள்ள சில விஷயங்களை நான் இங்கு கூறுகிறேன். அவர்கள் எழுதுகிறார்கள்:

இறுதியில் ஏறக்குறைய 30 நாட்கள் முற்றுகைக்குப் பிறகு இந்த துரதிர்ஷ்டம் வாய்ந்த யூதர்கள் எவ்வாறான ஒருவரை தமது நீதிபதியாக ஆக்கிக் கொண்டு கோட்டையிலிருந்து இறங்கி வர சம்மதம் தெரிவித்தார்கள் என்றால், அவர் அவர்களின் கூட்டாளியாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

கவனமாகக் கேளுங்கள். வானங்களிலும், பூமியிலுமுள்ளவை எல்லாம் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியன. நன்றாகக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. ஆனால் அவர்களுள் பெரும்பாலார் அறிவதில்லை. (10:56)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

இருந்தபோதிலும் அவர்களின் நடவடிக்கைகளின் காரணமாக தமது உள்ளத்தில் அவர்களுக்காக எவ்வித கருணையையும் கொண்டிருக்கவில்லை. அவர் நீதி நேர்மையின் முழு உருவமாக இருந்தார். ஆனால் அவருடைய உள்ளத்தில் ரஹ்மத்துல் லில் ஆலமீன் (ஸல்) அவர்களைப் போன்று பரிவு, இரக்கம் கொண்டிருக்கவில்லை.

இதன் விளக்கம் என்னவெனில், அவ்ஸ் கோத்திரத்திரம் பனூ குரைலாவின் முற்காலத்து நண்பனாக இருந்தது. அக்காலத்தில் அந்த கோத்திரத்தின் தலைவராக சஅத் பின் முஆஸ் அவர்கள் இருந்தார்கள். அவர் அகழ் போரில் காயமுற்று பள்ளிவாசலின் முற்றத்தில் சிகிச்சையிலிருந்தார். அந்த பழங்காலத்து நட்பை கருத்தில் கொண்டவாறு நாங்கள் சஅத் பின் முஆஸ் அவர்களை எங்கள் நீதிபதியாக ஆக்கிக் கொள்கிறோம். அவர் எங்களைக் குறித்து என்ன தீர்ப்பு கூறினாலும் நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம் என பனூ குரைஸா கூறியது.

முன்னர் கூறப்பட்டதுபோன்று, யூதர்களுள் சிலர் தமது சமுதாயத்தின் முடிவை சரியானதாக கருதவில்லை. தம்மைத்தாமே குற்றவாளியாக உறுதி கொண்டனர். மேலும் உள்ளத்தில் இஸ்லாத்தின் உண்மையை ஒப்புக் கொண்டனர். இவ்வாறான மக்களுள் சிலர் மகிழ்ச்சியோடு இஸ்லாத்தை ஏற்று விட்டனர். அவர்களின் எண்ணிக்கை வரலாற்றின் அடிப்படையில் 3 என்று கூறப்படுகிறது.

இவர்களைத் தவிர இன்னொரு நபர் இருந்தார். அவர் முஸ்லிமாகவில்லை. ஆனால் அவர் தமது சமுதாயம் செய்த துரோகத்தின் காரணமாக எந்த அளவு வெட்கி தலை குனிந்திருந்தார் என்றால் பனூ குரைலா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் செய்ய முடிவு செய்தபோது, என்னுடைய சமுதாயம் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கடும் துரோகம் செய்துள்ளது. நான் இந்த துரோகத்தில் இணை முடியாது என்று கூறி மதீனாவை விட்டு எங்கோ வெளியேறிச் சென்று விட்டார். ஆனால் மீதமுள்ள சமுதாயம் தனது பிடிவாதத்தில் உறுதியாக இருந்தது. மேலும் சஅத் அவர்களை தனது நடுவராக நியமிக்குமாறு வலியுறுத்தியது. ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

இது குறித்து முன்னர் கூறப்பட்டு விட்டது. இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சஅத் அவர்களை அழைத்து வர சில அன்ஸாரி சஹாபாக்களை அனுப்பி வைத்தார்கள். சஅத் அவர்கள் வந்தார்கள். வழியில் அவர்களின் கோத்திரத்தைச் சார்ந்த சிலர், குரைஸா இனத்தினர் நமது நண்பர்களாவர். ஆகவே கஸ்ரஜ் கோத்திரத்தினர் தமது நட்புக் கோத்திரமான பனூ கைனுகாவுடன் எவ்வாறு மென்மையுடன் நடந்து கொண்டார்களோ அவ்வாறு இவர்களை கருத்தில் கொள்ள வேண்டும். இவர்களுடன் சலுகையுடன் நடந்து கொள்ள வேண்டும். இவர்களுக்கு கடும் தண்டனை தந்து விடக்கூடாது என வலியுறுத்தி வந்தனர்.

மீண்டும் மீண்டும் விண்ணப்பித்தனர். சஅத் பின் முஆஸ் அவர்கள் ஆரம்பத்தில் அவர்களின் பேச்சை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் சார்பாக அதிக அழுத்தம் தரப்பட்டபோது, இது எவ்வாறான நேரம் என்றால் சஅதாகிய நான் உண்மை மற்றும் நீதியில் எந்த பழித்துரைப்பவரின் பேச்சையும் பொருட்படுத்த மாட்டேன் என்று கூறினார்கள். சஅத் அவர்களின் இந்த பதிலை கேட்டவுடன் அவர்கள் அமைதியாகி விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களிடம், உங்களது தலைவருக்காக எழுந்து நில்லுங்கள். அவர் சவாரியிலிருந்து கீழே இறங்க உதவி செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் அவர்கள் சவாரியிலிருந்து கீழே இறங்கிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களிடத்தில், சஅதே! பனூ குரைலா உம்மை நீதிபதியாக ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்களைக் குறித்து நீங்கள் என்ன தீர்ப்பு கூறினாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் எனக் கூறினார்கள்.

இதன் பிறகு சஅத் அவர்கள் தனது அவ்ஸ் கோத்திரத்தின் மக்களை ஏறெடுத்து பார்த்தவாறு, நீங்களை இறைவனை சாட்சியாகக் கொண்டவாறு பனூ குரைலாவைக் குறித்து நான் கூறும் இந்த தீர்ப்பிற்கு கட்டுப்பட்டு செயலாற்ற நீங்கள் உறுதியான வாக்குறுதி வழங்குகிறீர்களா? என்று கேட்டார்கள். ஆம், நாங்கள் வாக்குறுதி கொடுக்கின்றோம் என மக்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய விளக்கத்திலும் இந்த சம்பவம் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த திசையை நோக்கி சுட்டிக் காட்டியவாறு, இங்கு அமர்ந்திருக்கின்ற சாஹிபும் இவ்வாறு வாக்குறுதி தருகிறார்களா? அவர்கள் எவ்வாறாயினும் எனது தீர்ப்புக்கேற்ப செயலாற்ற கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள நான் வாக்குறுதி அளிக்கிறேன் என்று கூறினார்கள்.

இந்த உறுதிமொழி வாங்கிய பிறகு, ஹஸ்ரத் சஅத் அவர்கள் தனது தீர்ப்பை வழங்கினார்கள். அது என்னவென்றால், பனூ குரைலாவில் போரிடக் கூடியவர்கள் கொல்லப்பட வேண்டும். அவர்களின் பெண்களும் குழந்தைகளும் கைது செய்யப்பட வேண்டும். அவர்களின் செல்வம் முஸ்லிம்களிடத்தில் விநியோகம் செய்யப்படிட வேண்டும் என்பதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த தீர்ப்பை கேட்டவுடன் கூறினார்கள்: உங்களுடைய இந்த தீர்ப்பு இறை நியதியாகும். இது நீங்காது.

இது முற்றிலும் உண்மையாகும். ஏனென்றால், பனூ குரைஸா தாம்தான் ஆலோசனைக்காக அபூ லுபாபாவை அழைப்பது, மேலும் அபூ லுபாபா அவர்களின் வாயிலிருந்து அடிப்படையற்ற ஒரு விஷயம் வெளிப்படுவது, அவ்ஸ் கோத்திரத்தினர் நமது நண்பர்களாக இருக்கின்றார்கள். ஆகவே நம்முடைய சலுகையுடன் நடந்து கொள்வார்கள் என்று எண்ணி ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ்

## திருக்குர்ஆனிலிருந்து...

மக்களே! நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் அறிவுரை வந்துவிட்டது. அது நெஞ்சங்களிலுள்ள (நோய்கள் எல்லா)வற்றிற்கு(ம்) குணம் (அளிக்கக்கூடியது) ஆகவும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு நேர்வழியாகவும் அருளாகவும் உள்ளது. (10:58)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

(ஸல்) அவர்களை தமது நீதிபதியாக ஏற்றுக் கொள்ள மறுத்து அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் அவர்களை பனூ குரைலா தமது நீதிபதியாக ஆக்கிக் கொள்வது, ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஒருதலைப்பட்சத்தையும் நட்பையும் கருத்தில் கொள்ளாமல் அதை உள்ளத்திலிருந்து துடைத்தெறிந்து விட்டு உண்மை மற்றும் நீதியின் வழியில் உறுதியாக நிற்றல், இறுதியில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் தமது தீர்ப்பை கூறுவதற்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இந்த தீர்ப்பின்படி நடைமுறைப்படுத்தப்படும் என உறுதியான வாக்குறுதி வாங்கிக் கொள்வது போன்ற இவ்வனைத்து விஷயங்களும் தற்செயலாக நடந்ததாக இருக்க முடியாது. இதன் பின்னால் இறை நியதி தனது வேலையை செய்து கொண்டிருந்தது. இந்த தீர்ப்பு இறைவனுடைய தீர்ப்பாகும். சஅத் அவர்களின் தீர்ப்பல்ல.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: பனூ குரைலாவின் உடன்படிக்கை மீறல், துரோகம், கிளர்ச்சி, குழப்பம், கொலை போன்றவற்றின் காரணமாக அவர்களுள் போரிடக் கூடியவர்களை இவ்வுலகத்திலிருந்து அழித்து விட வேண்டும் என இறை நீதிமன்றத்திலிருந்து இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது போன்று தோன்றுகிறது. ஏனென்றால் ஆரம்பத்தில் இந்த போர் குறித்து மறைவான தூண்டுதல் ஏற்பட்டதும் கூட இது இறை நியதியாகும் என்று தெரிய வருகிறது. தனது தூதரின் மூலமாக இந்த தீர்ப்பு கொடுக்கப்படுவதை இறைவன் விரும்பவில்லை. ஆகவே அவன் மிக மிக நுட்பமான மறைவான ஆதிக்கத்தினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முற்றிலும் தனியாக பிரித்து விட்டான். மேலும் சஅத் பின் முஆஸ் அவர்களின் மூலமாக இந்த தீர்ப்பின் அறிவிப்பை செய்ய வைத்தான்.

எவ்வாறான வழிமுறையின் மூலமாக தீர்ப்பு கூறப்பட்டதென்றால், அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொஞ்சம் கூட தலையிட முடியாது. எவ்வாறிருப்பினும் இந்த தீர்ப்பிற்கு கட்டுப்படுவேன் என அன்னார் (ஸல்) அவர்கள் வாக்குறுதியளித்திருந்தார்கள். மேலும் இந்த தீர்ப்பின் தாக்கமும் அன்னார் மீது மட்டுமல்ல. அனைத்து முஸ்லிம்களின் மீதும் ஏற்படும். ஆகவே எவ்வளவுதான் பிழை பொறுத்து கருணை காட்டக்கூடிய தனது கருததாக இருந்தாலும் இந்த தீர்ப்பை மாற்றும் உரிமை தமக்கு இருப்பதாக அன்னார் கருதவில்லை. இதுவே இறைவனின் தலையீடாகும். இறை வல்லமையின் தாக்கத்தினால் அன்னாரது நாவிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிப்பட்டன. அதாவது சஅதே! உமது இந்த தீர்ப்பு இறை நியதியாக தெரிகிறது. இதை மாற்றுவதற்கு யாருக்கும் ஆற்றலில்லை என்று அன்னார் கூறினார்கள்.

இந்த சொற்களைக் கூறிவிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக எழுந்து ஊரை நோக்கிச் சென்றார்கள். இந்த சமுதாயம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என அன்னாரது உள்ளத்தில் பெரும் விருப்பம் இருந்தது. ஆனால் அது தனது தீய நடத்தையின் காரணமாக நம்பிக்கை கொள்வதிலிருந்து விலகி இறை கோபம் மற்றும் தண்டனையின் இலக்காகிக் கொண்டிருக்கிறது என அன்னாரது உள்ளம் அப்போது வேதனையடைந்து கொண்டிருந்தது. அநேகமாக இந்த தருணத்தில்தான் அன்னார் ஏக்கத்துடன், யூதர்களுள் செல்வாக்குள்ள 10 நபர்களாவது என்மீது நம்பிக்கை கொண்டிருந்தால் இந்த முழு சமுதாயமும் என்மீது நம்பிக்கை கொண்டிருக்கும். மேலும் இறை தண்டனையிலிருந்து தப்பியிருக்கும் என நான் இறைவன் மீது எதிர்பார்ப்பு கொண்டிருப்பேன் என்று கூறினார்கள்.

அன்னார் அங்கிருந்து எழுந்து செல்லும்போது பனூ குரைலாவின் ஆண்களை தனியாகவும், பெண்களையும், குழந்தைகளையும் தனியாகவும் பிரிக்குமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே இருவரையும் தனித்தனியாக ஆக்கி மதீனாவுக்கு அழைத்து வந்தார்கள். ஊரில் தனித்தனி கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப சஹாபாக்களுள் பெரும்பாலார் பசித்திருந்தும் பனூ குரைலாவினர் உண்பதற்காக பழக் குவியல்களை ஏற்பாடு செய்து கொடுத்தனர். யூதர்கள் இரவு முழுதும் பழங்களை உண்டு கொண்டிருந்தனர் என எழுதப்பட்டுள்ளது.

அடுத்த நாள் காலையில் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் அவர்களின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தகுதியுள்ள சில நபர்களை இந்த பணியை நிறைவேற்றும் பொருட்டு நியமித்தார்கள். மேலும் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும்போது ஏதேனும் விஷயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் தேவைப்பட்டால் உடனடியாக வழிகாட்டல் கொடுப்பதற்காகவும், ஒரு குற்றவாளி தொடர்பாக எவராவது கருணைக்காக மேல்முறையீடு செய்தால் உடனடியாக கட்டளையிடுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அருகிலேயே அமர்ந்து கொண்டார்கள்.

ஏனென்றால் சஅத் அவர்களின் தீர்ப்பின் மேல்முறையீடு, நீதிமன்றம் என்ற அடிப்படையில் அன்னாரது முன்னால் எடுத்து வைக்கப்பட முடியாது. ஆனால் ஒரு அரசர் என்ற அடிப்படையிலும், ஜனாதிபதி என்ற அடிப்படையிலும் ஒரு தனி நபர் குறித்து ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் கருணை மேல்முறையீட்டை அன்னார் கேட்க முடியும்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருணையின் அடிப்படையில் குற்றவாளிகளை ஒவ்வொருவராக தனித்தனியாக மரண தண்டனை கொடுக்கும்படியும் கட்டளையிட்டார்கள். அதாவது ஒருவருக்கு தண்டனை கொடுக்கப்படும்போது இன்னொரு குற்றவாளி அருகில் இருக்க வேண்டாம் என்றார்கள். ஆகவே ஒவ்வொரு குற்றவாளியாக தனித்தனியாக கொண்டு வரப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பிற்கிணங்க கொல்லப்பட்டார்கள்.

பனூ குரைலாவின் சம்பவம் குறித்து சில முஸ்லிமல்லாத வரலாற்று ஆசிரியர்கள் விரும்பத்தகாத வழிமுறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக தாக்குதல் தொடுத்து வருகிறார்கள். அல்லது தாக்குதல் தொடுத்துள்ளார்கள். ஏறக்குறைய 400 யூதர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ் அநீதியாளர் என்றும் கொடுங்கோலர் என்றும் சித்தரிக்கின்றனர்.

ஆனால் உண்மையான எண்ணம் 16 அல்லது 17 என்று நம்முடைய ஆராய்ச்சியாளர் ஒருவர் இதைக் குறித்தும் ஆராய்ச்சி செய்துள்ளார். ஆனால் எவ்வாறிருப்பினும் இது இன்னும் ஆராய தகுந்ததாகும். இன்னும் ஆராய வேண்டும்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

யூதர்களின் எண்ணிக்கை 100 என்று ஒருவர் எழுதியிருக்கிறார். ஒருவர் 400 என்று எழுதியிருக்கிறார். ஒருவர் இதைவிட அதிகமாக எழுதியிருக்கிறார். ஒருவர் 100 என்று எழுதியிருக்கிறார். ஒருவர் 900 என்று எழுதியிருக்கிறார். எவ்வாறிருப்பினும் குறித்த எண்ணிக்கை தெரியவில்லை. ஆகவே இது குறித்து இன்னும் ஆராய வேண்டும். அந்த எண்ணிக்கை 400 ஆக இருந்தாலும் இக்குற்றச்சாட்டு மத துவேஷயத்தின் காரணமாக செய்யப்பட்டுள்ளது.

மேற்கத்திய சூழ்நிலையில் வளர்ந்த வரலாற்றாசிரியர்கள் கூட இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் ஸ்தாபகர் மீது இழைக்கப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டிலிருந்து விலகி இருக்கவில்லை. அவர்களும் இதே குற்றச்சாட்டைத்தான் கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த குற்றச்சாட்டிற்கு பதிலளித்தவாறு எழுதுகிறார்கள்:

1. பனூ குரைலாவைக் குறித்து வழங்கப்பட்ட தீர்ப்பு கொடூரமானது என்று கூறப்படுகிறது. அது சஅத் பின் முஆஸ் அவர்களின் தீர்ப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பு ஒருபோதும் கிடையாது. அந்த தீர்ப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பாக இல்லாமல் இருக்கும்போது அன்னாரின் மீது குற்றச்சாட்டு வர முடியாது.

2. சூழ்நிலையின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த தீர்ப்பு தவறான தீர்ப்போ, கொடூரமான தீர்ப்போ கிடையாது.

3. சஅத் அவர்கள் தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உறுதிமொழி வாங்கிக் கொண்டார்கள். ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தீர்ப்பின்படி செயல்பட கட்டுப்பட்டிருந்தார்கள்.

4. தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் இந்த தீர்ப்பை ஏற்றுக் கொண்டனர். அதில் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. அதை இறை நியதியாக கருதினர். எனவே இந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தேவையின்றி இதில் நுழைய முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அரசாட்சியின் மூலமாக இந்த தீர்ப்பை அழகிய முறையில் நடைமுறைப்படுத்தும் அளவுக்கு மட்டுமே சஅத் அவர்களின் தீர்ப்புடன் இந்த விவகாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொடர்பு இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருணை மற்றும் பரிவின் மிக உன்னதமான முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். இது குறித்து ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அதாவது தீர்ப்பு நடைமுறைப்படுத்தும் வரை இம்மக்கள்சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்குவதற்கும் உண்பதற்கும் மிகச்சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஹஸ்ரத் சஅத் அவர்களின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும்போது, குற்றவாளிகளுக்கு மிகக் குறைந்த அளவுக்கு வேதனை இருக்கும் வகையில் வழிமுறையை கையாண்டார்கள். அதாவது முதலாவது விஷயம் என்னவென்றால், அவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டவாறு ஒரு குற்றவாளிக்கு மரண தண்டனை கொடுக்கப்படும்போது இன்னொரு குற்றவாளி முன்னால் இருக்காதவாறு பார்த்துக் கொள்ளும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

வரலாற்றிலிருந்து தெரியவருவது போன்று குற்றவாளிகளை மரண தண்டனை நிறைவேற்றும் இடத்திற்கு கொண்டு வரும் வரை, அந்த இடத்தை அடையும் வரை எங்கே செல்கிறோம் என அவர்களுக்கு தெரியாமல் இருந்தது. இது தவிர எவரைக் குறித்து கருணை மனு வேண்டப்பட்டாலும் அன்னார் உடனடியாக அதை ஏற்றுக் கொண்டார்கள். அந்த நபருடைய உயிரை மட்டும் மன்னித்து விடவில்லை. மாறாக, அவர்களுடைய மனைவி மக்கள் மற்றும் செல்வத்தையும் திரும்ப ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார்கள். இதைவிட ஒரு குற்றவாளியுடன் கருணையுடனும் பரிவுடனும் எவ்வாறு நடந்து கொள்வது?

பனூ குரைலா சம்பவத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஒருபோதும் ஆட்சேபனை வர முடியாது என்பதுடன் இந்த சம்பவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த ஒழுக்கம், சிறந்த நிர்வாக திறன் மற்றும் அன்னாரின் இயல்பான கருணை, கிருபை ஆகியவற்றின் தெளிவான ஒரு சான்றாகும். சஅத் அவர்களின் தீர்ப்பு தன்னகத்தே கடுமையான ஒரு தீர்ப்பாக இருக்கலாம். மனித இயல்பு வெளிப்படையில் இதனால் துன்பமடையலாம். ஆனால் கேள்வி என்னவென்றால், இதைத்தவிர வேறு ஏதேனும் வழி இருந்ததா? என்பதாகும்.

பனூ குரைலா குறித்து சஅத் அவர்களின் தீர்ப்பு நாம் ஏற்கனவே கூறியதுபோன்று தன்னகத்தே கடுமையானதாக இருந்தாலும் அது சூழ்நிலையின் நிர்பந்தத்தினால் ஏற்பட்ட நிகழ்வாகும். இதைத்தவிர வேறு வழியிருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் இஸ்லாத்தின் அனுதாபிகளைச் சாராத மார்குலிஸ் போன்ற வரலாற்றாசிரியர்களும் இத்தருணத்தில் சஅத் அவர்களின் தீர்ப்பு சூழ்நிலையின் நிர்பந்தத்தினால் ஏற்பட்ட நிகழ்வாகும்; இதைத்தவிர வேறு வழியில்லை என இத்தீர்ப்பை ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆகவே மார்குலிஸ் எழுதுகிறார்: அஹ்ஸாப் போர் குறித்து முஹம்மது சாஹிப் (ஸல்) அவர்களின் வாதம் என்னவென்றால், அது இறை சுழற்சியினால் தலைகீழானது. மேலும் பனூ நளீர் கோத்திரத்தின் ஆத்திரமூட்டும் முயற்சியினால் ஏற்பட்ட விளைவேயாகும் என்பதாகும். பனூ நளீர் கோத்திரம் யாரென்றால், முஹம்மது சாஹிப் (ஸல்) அவர்கள் அம்மக்களை நாடு கடத்துவது போதுமானது என்று கருதினர். ஆனால் இப்போது கேள்வி என்னவென்றால், பனூ குரைலாவையும் நாடு கடத்தி தமக்கெதிராக தூண்டிவிடும் மக்களின் எண்ணிக்கையையும், வலிமையையும் அதிகரிக்க விரும்புவாரா? என்பதாகும்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், பனூ குரைலா மக்களை மதீனாவில் வசிப்பதற்கு அனுமதியளிக்கவும் முடியாது. அவர்கள் வெளிப்படையாகவே தாக்குதல் தொடுத்தவர்களுக்கு ஒத்தாசை புரிந்தார்கள். அவர்களை நாடு கடத்துவது (முஸ்லிம்களுக்கு) பாதுகாப்பானதல்ல. அவர்கள் மதீனாவில் இருப்பதும் குறைந்த ஆபத்து கிடையாது. அவர்களுக்கு மரண தண்டனை கொடுப்பதைத்தவிர வேறு வழியில்லை.

இதை மார்கலிஸ் எழுதியுள்ளார். ஆகவே சஅத் அவர்களின் தீர்ப்பு முற்றிலும் நியாயமான, நீதியான தீர்ப்பாகும். எவர்களல்லாம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் அடையாளங்களைப் பொய்ப்படுத்தியவர்களைச் சார்ந்தவராக நீர் ஒருபோதும் ஆகிவிட வேண்டாம். இல்லையேல் நீர் நஷ்டவாளிகளைச் சார்ந்தவராகி விடுவீர். (10:96)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

கருணை புரியுமாறு மேல்முறையீடு செய்தார்களோ அவ்வாறான சிலரை காப்பாற்ற ஹஸ்ரத் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா விதத்திலும் முயற்சி மேற்கொண்டார்கள்.

தான் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக இதைத்தவிர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த தீர்ப்பில் கருணை காட்ட இயலாதவர்களாக இருந்தார்கள். பொது மன்னிப்பு வழங்க முடியாதவர்களாக இருந்தார்கள். யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நீதிபதியாக ஒப்புக் கொள்வதை மறுத்ததன் காரணமாக வெட்கமடைந்து, அன்னாரிடம் வந்து கருணைக்காக மேல்முறையீடு செய்வதின் பக்கம் அதிக கவனம் செலுத்தவில்லை என தெரிய வருகிறது.

சிலர் கருணை மனு விண்ணப்பித்தார்கள். வெளிப்படையில் கருணைக்காக மேல்முறையீண்டு செய்யாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கருணை காட்ட இயலாது. ஏனெனில் கிளர்ச்சி செய்யக் கூடியவன் தனது குற்றத்தின் மீது வெளிப்படையாக வருத்தம் தெரிவிக்காத வரையில் அவனை தாமாகவே விட்டு விடுவது என்பது அரசாட்சியில் மிகவும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

இன்னொரு விஷயத்தையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. அது என்னவென்றால், ஆரம்ப காலத்தில் யூதர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் பல்வேறு நிபந்தனைகள் வகுக்கப்பட்டன. அதில் ஒரு நிபந்தனை என்னவென்றால், யூதர்களைக் குறித்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்றால், அவர்களின் வேதத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்க வேண்டும் என்பதாகும். அதாவது யூதர்களின் வேதத்தின் அடிப்படையில்.

வரலாற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் யூதர்களின் விஷயத்தில் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கி வந்தார்கள். நாம் தவ்ராத்தைப் பார்க்கும்போது பனூ குரைலா செய்த குற்றத்தைப் போன்ற செயலுக்கான தண்டனை சஅத் அவர்கள் பனூ குரைலா குறித்து வழங்கிய தீர்ப்பாக உள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 599–611)

பனூ குரைலா விவகாரத்தில் சஅத் பின் முஅஸ் அவர்களுக்கு எந்த அளவுக்கு தொடர்பிருந்ததோ அது பற்றிய விளக்கம் இந்த அளவு இங்கு போதுமானது. ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களைப் பற்றிய இன்னும் சில விபரங்கள் எஞ்சியுள்ளன. அதை இனி வரும் காலத்தில் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

கடந்த நாட்களில் வஃபாத்தான சிலரைப் பற்றி இப்போது எடுத்துரைப்பேன். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

முதலாவது குறிப்பு, மதிப்பிற்குரிய ருகைய்யா காலித் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் லஜ்னா இமாயில்லாஹ் கானாவின் தலைவியாக இருந்தார்கள். கடந்த ஜூன் 30 ஆம் தேதி இறைநியதிக்கேற்ப தமது 65 ஆவது வயதில் வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அவர்களுக்கு Uterine கேன்ஸர் இருந்தது. அதன் பிறகு இவர்கள் மீண்டு வந்தார்கள். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு உடல் ஆரோக்கியத்தை வழங்கினான். ஆனால் இவ்வருடம் மே மாதம் மறுபடியும் அவர்களது உடல்நிலை மோசமாக தொடங்கியது. திடீரென்று மீண்டும் நோய் தாக்கியது. சில காலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பிறகு ஜூன் 30 ஆம் தேதி அவர்கள் வஃபாத்தானார்கள்.

ஹாஜியா ருகைய்யா காலிது சாஹிபா அவர்கள் கானவினுடைய வடக்கு பகுதியான வாஹ் எனுமிடத்தில் ஏப்ரல் 1955 ஆம் ஆண்டு ஓர் அஹ்மதி வீட்டில் பிறந்தார்கள். இவர்களுடைய தந்தை மர்ஹூம் அல்ஹாஜ் காலித் சாஹிப் அவர்கள் வா ஊருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தின் இமாமாக இருந்தார்கள். அங்கு அநேக மக்கள் சிலை வணங்கிகளாக இருந்தார்கள். சில வணங்கக்கூடிய மக்களிடையே தப்லீக் செய்து அஹ்மதிய்யத்தை ஏற்படுத்தினார்கள். மர்ஹூமா அவர்களுடைய குழந்தைப் பருவம் வாஹ் ஊரில்தான் கழிந்தது.

தெளிவான, ஒழுங்கு முறையை பேணக்கூடிய, கொள்கையை விரும்பக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். மர்ஹூமா ஒரு ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார்கள். தனது பணி இடத்திலும், வட்டாரத்திலும், அன்பர்களிடத்திலும், ஜமாஅத்திலும் மேலும் மற்றவர்களிடத்திலும் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள்.

பணி ஓய்வு பெற்ற பிறகு புஸ்தானே அஹ்மதில் அஹ்மதிய்யா இன்டர்நேஷனல் பள்ளிக்கூடத்தின் ஆசிரியையாக தொண்டாற்றி வந்தார்கள். குழந்தைகளுக்கான கல்வி, ஒழுக்கப்பயிற்சியில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். மேலும் பல குழந்தைகளை தமது வீட்டில் வைத்து எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் கற்பித்து வந்தார்கள். 2017 ஆம் ஆண்டு சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்வாக நியமிக்கப்பட்டார்கள்.

நோய்வாய்ப்பட்டு இருந்தபோதிலும், எத்தனை ஆண்டுகள் அவர்கள் தலைமை பொறுப்பில் இருந்தார்களோ மிகவும் திறம்பட செயலாற்றி வந்தார்கள். வஃபாத் வரையிலும் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ் என்ற அடிப்படையில் பணி செய்து வந்தார்கள். பல்வேறு நிகழ்ச்சிகளை அவர்கள் நடத்தி வந்தார்கள். தற்போது கொரோனா காரணமாக பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருந்தும் இன்டர்நெட் போன்வற்றின் மூலமாக தர்பிய்யத் பணிகளை செய்து வந்தார்கள்.

மேலும் லஜ்னா இமாயில்லாஹ்வின் தர்பிய்யத் பணிகளை செய்து வந்தார்கள். தொழுகைகளை முறையாக தொழக்கூடியவர்களாக திகழ்ந்தார்கள். மிகவும் ஆர்வத்துடன் நன்மைகளை செய்து வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்களாக இருந்தார்கள். முறையாக சந்தா செலுத்தக்கூடிய பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். கிலாஃபத்துடன் மிக ஆழமான தொடர்பு இருந்தது.

அவர்கள் தமக்குப் பின்னால் இரண்டு மகன்கள், ஒரு மகள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

உமது இறைவன் (கட்டாயமாக) விரும்பியிருந்தால் பூமியிலுள்ளவர்கள் எல்லாருமே ஒன்றாக நம்பிக்கை கொண்டிருப்பர். (எனவே இறைவனே கட்டாயப்படுத்தாதிருக்கும் போது) மக்கள் நம்பிக்கை கொள்வதற்காக நீர் அவர்களைக் கட்டாயப்படுத்துவீராக. (10:100)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

மற்றும் நான்கு பேரக்குழந்தைகளை விட்டு சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அவர்களுடைய சந்ததிகளிடத்திலும் அவர்கள் செய்து வந்த நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா, ஆப்பிரிக்கா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் முபல்லிக் ஆக பணியாற்றிய மதிப்பிற்குரிய ஷேக் முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களுடைய மனைவி மதிப்பிற்குரிய சஃபியா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் ஜூன் 27 ஆம் தேதி 93 ஆம் வயதுல் இறைநியதிக்கேற்ப வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அன்னார் ஹஸ்ரத் காஸி அப்துஸ்ஸலாம் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய முபாரக் பேகம் சாஹிபா அவர்களுக்கு மகளாக 1926 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிறந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் காஸி அப்துர் ரஹீம் சாஹிப் அவர்களின் மகன் வழி பேத்தியும், ஹஸ்ரத் காஸி ஜியாவுத்தீன் சாஹிப் அவர்களின் கொள்ளுப்பேத்தியும் ஆவார்.

எண்ணற்ற சிறப்புகளின் எஜமானியாக திகழ்ந்தார்கள். எப்பொழுதும் துஆ செய்து வரக்கூடிய சான்றோர் ஆவார். கிலாஃபத்துடன் கலப்பற்ற நேசம் கொண்டிருந்தார்கள். இது மிகக் குறைவாகவே காணக்கிடைக்கின்ற பண்பாகும். அவர்கள் இந்த தொடர்பை தனது சந்ததிகளிடத்தில் மட்டுமல்லாமல் சந்ததிகளின் சந்ததிகளிடத்திலும் உருவாக்கினார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். ஷேக் முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களுடன் இவர்களுக்கு இரண்டாவதாக திருமணம் நடந்திருந்தது. இவர் மூலமாக ஒரு மகள் பிறந்தார்.

முதலாவது கணவருடய பெயர் மூலமாகவும் பிள்ளைகள் இருந்தார்கள். முதலாவது கணவருடைய பெயர் நஸீர் அஹ்மது பட்டி சாஹிப் ஆகும். ஷேக் சாஹிப் அவர்கள் பல்வேறு நாடுகளில் தொண்டு செய்துள்ளார்கள். இவர்கள் அவருடன் மிகவும் விசுவாசத்துடன் வாழ்க்கையை கழித்திருக்கிறார்கள். ஷேக் சாஹிப் அவர்களுடைய முதல் மனைவி மூலமாக பிறந்த ஒரு பெண் குழந்தைகயைத் தவிர இவர்களுடைய இரண்டு பெண் பிள்ளைகள், மூன்று மகன்களை தமக்குப் பின்னால் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இவருடைய ஒரு மகன் ரஹீம் அஹ்மது பட்டி சாஹிப் இங்கு Private Sec அலுவலகத்தில் தன்னார்வ தொண்டராக வேலை செய்து வருகிறார். சபூர் பட்டி சாஹிப் என்ற ஒரு பேரன் ஜமாஅத்தினுடைய முரப்பி ஆவார். யூகே வகாலத் தப்ஷீரில் பணியாற்றி வருகிறார். அஹ்மது ஃபவாது பட்டி சாஹிப் என்ற இன்னொரு பேரன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். இவர் அஹ்மதிய்யா காலேஜில் ஆசிரியராக தொண்டாற்றி வருகிறார். கலீக் பட்டி சாஹிப் என்ற இன்னொரு பேரன் கல்வியை நிறைவு செய்துவிட்டு வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டு தற்போது ரிவ்யூ ஆஃப் ரிலீஜியன்ஸில் தொண்டாற்றி வருகிறார்.

நபீல் பட்டி சாஹிப் என்ற மகன் வழி பேரன் ஒருவர் இரண்டு வருடங்களுக்கு முன்பு கடுமையாக நோய்வாய்ப்பட்டார். ஏறக்குறைய மரணத்தை நெருங்கி விட்டிருந்தார். அவருக்காக இவர்கள் அதிகமாக அதிகமாக துஆ செய்தார்கள். மேலும் அல்லாஹ் அந்த பையன் குணமாவதை பற்றி இவர்களுக்கு செய்தியும் அறிவித்தான். அல்லாஹ் அவருக்கு குணத்தை வழங்கினான். ஆனால் எவ்வாறிருந்தபோதிலும் இப்பொழுதும் நபீல் பட்டி சாஹிப் அவர்களுக்கு அந்த நோயின் காரணமாக சிறு சிறு துன்பங்கள் வந்து கொண்டேதான் இருக்கிறது.

அல்லாஹ் அவர்களுக்கு முழுமையான நிவாரணத்தையும் வழங்குவானாக. மேலும் சஃபியா பேகம் சாஹிபா அவர்கள் அவர்களுக்காக செய்த துஆக்களை ஏற்றுக் கொள்வானாக. இவரும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். அல்லாஹ் இவரையும் ஜமாஅத்திற்கு பயனளிக்கக் கூடியவராக ஆக்குவானாக. இவரையும் இவர்களின் சந்ததிகளையும் மார்க்க தொண்டர்களாக ஆக்குவானாக.

இவர்களுடைய மகள் ஃபரிதா ஷேக் சாஹிபா கூறுகின்றார்கள்: எங்களுடைய தாயாருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அதிக நேசம் இருநதது. எப்பொழுதுமே அன்னாருடைய புகைப்படத்தை சுட்டிக்காட்டி இவர்கள் மூலமாகத்தான் நமக்கு எல்லாமே கிடைத்தது; இவர்கள் மூலமாகத்தான் எல்லா அருளும் கிடைத்தது என்று கூறி வருவார்கள்.

பிறகு, ஆப்பிரிக்கா, அமெரிக்க சகோதரிகளுடன் இவர்களுக்கு குறிப்பான தொடர்பு இருந்தது. அவர்களை நன்கு கவனித்துக் கொண்டார்கள். அவர்களில் பெரும்பாலார் தினந்தோறும் வீட்டுக்கு வந்து செல்வார்கள். மேலும் வீட்டில் சாதாரணமாக வந்து செல்வார்கள். சமையல் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். குடும்பத்திலுள்ள ஒரு உறுப்பினரை போன்று அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுடைய பெரிய மகள் நயீமா ஷபீர் சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: மிகவும் பரிவுள்ள, நேகிக்கக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். எல்லையற்ற பொறுமைசாலியாக இருந்தார்கள். தன்மீது அநீதியிழைத்துக் கொண்டு பிறர் மீது அக்கறை கொள்ளக்கூடிய பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். கிலாஃத்தின் நேசத்தை எங்களது உள்ளங்களில் இட்டார்கள். தொடர்ச்சியாக கடிதம் எழுதுமாறு கூறி வந்தார்கள். தன்னுடைய சந்ததிகளுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களை படித்து வந்தார்கள். மேலும் ஏழைகள் மற்றும் அனாதைகளை நன்கு கவனித்துக் கொண்டார்கள். சந்தா மற்றும் சதகாக்களை மிகவும் முறையாக செலுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் குறிப்பான பரிவுடன் இவர்களது திருமணத்தை ஷேக் முபாரக் சாஹிபுடன் நடத்தினார்கள். அவர் முபல்லிக் ஆக இருந்தார். அவருடைய முதல் மனைவி இறந்து போயிருந்தார்கள். அதேபோன்று இவருடைய கணவர் இறந்து போயிருந்தார். ஷேக் சாஹிப் அவர்களுடைய ஒரு ஜமாஅத் பணியினால் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மகிழ்ச்சி அடைந்தவாறு, அப்பொழுது இவருடைய திருமண பந்தம் செய்து வைக்கும்போது, உங்களுக்கு ஒரு பரிசு தரப்போகிறேன் என்று கூறினார்கள்.

ஷேக் சாஹிபும் அந்த பரிசை கண்ணியப்படுத்தினார்கள். அந்த பரிசு என்னவென்றால், அது சஃபியா பேகம் சாஹிபா அவர்களுடைய உருவத்தில் வழங்கப்பட்டது. ஷேக் சாஹிப் அவர்களை சஃபியா சாஹிபா அவர்கள் கண்ணியப்படுத்தினார்கள். முதல் கணவர் மூலமாக பிறந்த குழந்தைகளையும் நன்கு கவனித்துக் கொண்டார்கள். முதல் கணவர் இளமைப் பருவத்தில் மரணமடைந்து போயிருந்தார்கள். அவர்களுடைய மூத்த மகன் ஷமீம் பட்டி சாஹிப் என்னுடன் ஸ்கூல் மற்றும் காலேஜில் படித்துள்ளார்.

ஷேக் சாஹிப் அவர்கள் அந்த குழந்தைகளை மிகவும் அக்கறையுடன் கவனித்துக் கொண்டதை நான் பார்த்துள்ளேன்.

அதற்கான உரிமையை வழங்கினார்கள். அதேபோன்று சஃபியா பேகம் சாஹிபா அவர்களும் களப்பணியில் எவ்வாறு உடன் இருந்தார்கள் என்றால் வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவருடைய மனைவியுடைய கடமை எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இருந்தார்கள். மிகக்குறைவான முபல்லிக்களுடைய மனைவிகளே இவ்வாறு உரிமையை செலுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு சஃபியா பேகம் சாஹிபா அவர்கள் அதற்கான உரிமையை செலுத்தினார்கள்.

கலப்பற்ற முறையில் விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். ஒருபோதும் வருத்தப்பட்டது கிடையாது. மேலும் ஜமாஅத் நபர்களுக்காக அதிகமாக துஆக்கள் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். ஷேக் சாஹிபின் கீழ் பணியாற்றிய முபல்லிக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருடனும் மிக நல்ல முறையில் நடந்து கொண்டார்கள்.

கிலாஃபத்திற்குப் பிறகு எனக்கு அவர்களுடன் அதிக தொடர்பு அதிக அறிமுகம் ஏற்பட்டது. கிலாஃபத்தின் மீது அதிக நேசம் கொண்டவர்களாக அவர்களை நான் கண்டுள்ளேன். இவ்வாறான பித்தர்கள் மிக குறைவாகவே காணக் கிடைக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களுடைய அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் இவர்களுடைய சந்ததிகளையும் எப்பொழுதும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் விசுவாசம் உடையவர்களாக ஆக்குவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய அலி அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். இவர் பணி ஓய்வு பெற்ற வக்ஃபே ஜதீதின் முஅல்லிம் ஆவார்கள். இவர் ஜூன் 18 ஆம் தேதி 86 வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவருடைய தந்தையார் ஹஸ்ரத் அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். 1903 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜஹ்லம் பயணத்தின்போது இவர் தனது கிராமத்திலிருந்து பத்து பனிரென்று மைல் தூரம் நடந்து வந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கரங்களில் பைஅத் செய்யும் நற்பேறு பெற்றார்கள்.

1965 ஆம் ஆண்டு வக்ஃப் செய்தார்கள். 1967 முதல் 2008 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 41 வருடங்கள் சிந்து மற்றும் பஞ்சாபின் பல்வேறு ஜமாஅத்துகளில் தொண்டாற்றியுள்ளார்கள். நூற்றுக்கணக்கான சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அன்னாருடைய முயற்சிகள் மற்றும் துஆக்களின் அருளினால் 20 ற்கும் மேற்பட்ட நல்ல ஆன்மாக்கள் ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பு பெற்றன.

மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூம் தமக்குப் பின்னால் மனைவி, இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் மூன்று மகன்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாருடைய ஒரு மகனான அப்துல் ஹாதி தாரிக் சாஹிப் கானாவில் முபல்லிக் ஆக பணியாற்றி வருகின்றார்கள். அங்குள்ள இன்டர்நேஷனல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஏழு வருடங்களாக ஆசிரியராக தொண்டாற்றி வருகின்றார்கள்.

தற்போதுள்ள சூழ்நிலைகளின் காரணமாக அவர் தனது தந்தையினுடைய ஜனாஸாவில், நல்லடக்கத்தில் கலந்து கொள்ள இயலவில்லை. அன்னாரின் சகோதரருடைய இரு பிள்ளைகள் ஜமாஅத்தினுடைய முரப்பி ஆக பணியாற்றி வருகின்றார்கள். மேலும் மூன்று மகள் வழி பேரன்கள் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள் ஆவார்கள்.

மக்ஃபூர் அஹ்மது முனீஃப் சாஹிப் என்ற வாழ்க்கையை அர்ப்பணித்த நமது முபல்லிக் சாஹிப் அவர்கள் தற்போது தலைமையகத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மதிப்பிற்குரிய மவ்லவி சாஹிப் அவர்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த முரப்பிகள் மற்றும் முஅல்லிம்களுக்கு சந்தேகத்திற்கிடமின்றி ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். பிறர் குறைகளை விட்டு முகந்திருப்பிக் கொள்பவராக இருந்தார்கள். தம்முடைய வேலையில் மட்டுமே கவனம் செலுத்தக் கூடியவர் ஆவார். அதிகமாக துஆக்கள் செய்யக்கூடியவர் ஆவார். பணிவான இயல்பு கொண்டவர் ஆவார். மலர்ந்த முகத்துடன் சந்திக்கக் கூடியவர் ஆவார்.

அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக பெரும் ஆபத்துகளை எதிர் கொண்டவர் ஆவார்கள். கோபப்பட்டாலும் கூட புரிய வைப்பதில் அதிகமாக வேதனையை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். மவ்லவி சாஹிபின் சீடர்களாக இருந்த பல சிறுவர், சிறுமியர் இன்று பெரியவர்கள் ஆகி விட்டனர். ஆனால் அவர்களுடைய உள்ளங்களிலிருந்து மவ்லவி சாஹிபின் நற்பண்புகள் மற்றும் நேசத்தின் ஞாபகங்களும் மறைந்து போய் விடவில்லை. அல்லாஹ் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அவர்களுடைய சந்ததிகளிடத்திலும் அவர்கள் செய்து வந்த நன்மைகளை தொடரச் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா நாரோவால் மாவட்டம் ஏதிபூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மது டோகர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ரஃபீகா பிபி சாஹிபா அவர்களுடையதாகும். மே மாதம் 22 ஆம் தேதி இறைநியதிக்கேற்ப வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னாலில்லாஹி ராஜிவூன்.

இவர்களுடைய குடும்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான இவருடைய பாட்டனார் ஹஸ்ரத் மாலிக் சர்தார் கான் டோகர் சாஹிப் நம்பர்தார்ல மூலமாக அஹ்மதிய்யத் வந்தது.

இவருடைய மகன் ரியாஸ் அஹ்மது டோகர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அன்னாரை மிக்க தொழுகையாளியாகவும், (தீமைகளை விட்டு) விலகி இருக்கக்கூடியவராகவும் கண்டுள்ளேன். தொழுகை, நோன்பு போன்றவற்றை முறையாக பேணி வந்தார்கள். எண்ணற்ற பல சூராக்கள் மனனமாக தெரிந்திருந்தது. காலையில் பால் கறக்கும்போது பெரும்பாலும் சூரா தகாபுனை ஓதி வருவார்கள்.

ஐவேளைத் தொழுகையை மிகவும் முறையாக தொழுது வந்தார்கள். ஒவ்வொரு தொழுகையின்போதும் ஓரிரண்டு பேரனையும், பேத்தியையும் தம்முடன் தொழுகைக்காக நிற்க வைப்பார்கள். இதன் மூலம் குழந்தைகளுக்கும் தொழுகைக்கான ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்வார்கள். தொழுகைக்குப் பிறகு நீண்ட நேரமாக முஸல்லாவில் அமர்ந்து தஸ்பீஸ் செய்து கொண்டிருப்பார்கள். இதேபோன்று உரத்த குரலில் திருக்குர்ஆன் ஓதி வருவார்கள். முழு வீட்டிலும் அவர்களுடைய திலாவத் குரல் எதிரொலிக்கும். அன்னாருக்கு பல சூராக்கள் மனனமாக தெரிந்திருந்தது.

கிலாஃபத்துடன் மிக்க பற்றும், நேசமும், மதிப்பும் கொண்டிருந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் துஆக்களின் மீது அதிக நம்பிக்கை இருந்தது. தனது மகனும் முரப்பி ஆவார் என்றும், தனது மகன் வழி பேரனும் முரப்பியாகிக் கொண்டிருக்கின்றார் என்றும், தனது மகள் வழி பேரனும் முரப்பி ஆவார் என்றும் பெருமையாக மக்களிடையே கூறுவார்கள். தமது பிள்ளைகளை அதிகமாக

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 20 Aug 2020 Issue No. 34

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நினைவுகூர்ந்து வந்தார்கள். அத்துடன், இறைவனுடைய பெரும் அருள் என்மீது உள்ளது! அவன் என்னுடைய கிளைகளை உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பியுள்ளான் என்றும் கூறி வருவார்கள். தமக்குப் பின்னால் ஆறு மகன்கள், ஒரு மகள் மற்றும் பல பேரன் பேத்திகளை விட்டுச் சென்றுள்ளார்கள். இவருடைய ஒரு மகன் ரியாஸ் அஹ்மது டோகர் சாஹிப் தன்ஸானிய்யாவில் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றார். அவரும் தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மேலும் தமது களப் பணியில் தீவிரமாக இருப்பதன் காரணமாகவும் ஜனாஸாவிலும், நல்லடக்கத்திலும் கலந்து கொள்ள இயலவில்லை. அல்லாஹ் அவர்களுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக.

இவருடைய மகள் வழி பேரன் அதீல் அஹ்மது டோகர் சாஹிப் பாகிஸ்தானில் முரப்பியாக தொண்டாற்றி வருகின்றார். மகன் வழி பேரன் அயாஸ் அஹ்மது டோகர் சாஹிப் ஜாமிஆ அஹ்மதிய்யா இன்டர்நேஷனல் கானாவில் ஐந்தாம் வருட மாணவராக உள்ளார். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அவர்களுடைய சந்ததிகளிடத்திலும் அவர்கள் செய்து வந்த நன்மைகளை தொடரச் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவானாக.

அதேபோன்று கடந்த குத்பாக்களில் நான் அறிவித்த ஜனாஸாக்களையும் இன்றைய ஜனாஸாவில் நான் இணைத்துக் கொள்வேன். அவர்களுடைய ஜனாஸா தொழுகையை சூழ்நிலையின் காரணமாக நான் தொழ வைக்க முடியவில்லை. அவர்களின் பெயர்கள்; நாஸிர் சயீது சாஹிப், குலாம் முஸ்தஃபா சாஹிப், இஸ்லாமாபாதைச் சார்ந்த டாக்டர் நகீயுத்தீன் சாஹிப், இந்தோனேசியாவின் முரப்பி ஸுல்ஃபிகார் சாஹிப் ஆகும். அல்லாஹ் இவர்கள் அனைவருடனும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து

பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறு எந்த வேத நூலும் இல்லை. ஆகவே, நீங்கள் இந்த மாபெரும் கம்பீரமான நபியுடன் உண்மையான நேசம் கொள்ள முயலுங்கள். அவருக்கு கொடுக்கப்படும் மதிப்பை விட மேலான மதிப்பை வேறு எவருக்கும் கொடுக்காதீர்கள். அப்போது தான் நீங்கள் வானத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக எழுதப்படுவீர்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்குப் பின் வெளியாகக்கூடிய ஒன்றன்று என்பதனை நினைவில் கொள்ளுங்கள்.

உண்மையான இரட்சிப்பானது தன் ஒளியை இவ்வுலகிலேயே வெளிப்படுத்திக் காட்டி விடுகிறது. இரட்சிப்பு பெற்றவர் யார்? உண்மையான இறைவன் ஒருவன் இருக்கிறான் என்றும் இறைவனுக்கும் அவனது அனைத்து படைப்பினங்களுக்குமிடையில் பரிந்து பேசக்கூடியவர், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே என்றும், வானத்தின் கீழ் அவர்களுக்கு சம நிலையிலுள்ள வேறு எந்த நபியும் இல்லை என்றும், திருக்குர்ஆனுக்கு ஒப்பான வேறு எந்த வேத நூலும் இல்லை என்றும் நம்பிக்கை வைக்கக் கூடியவர்களே இரட்சிப்புப் பெற்றவர்களாவர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் என்றென்றும் உயிர் வாழ வேண்டுமென்று அல்லாஹ் நாடவில்லை. ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த திரு நபி (ஸல்) அவர்கள் நிரந்தரமாக உயிரோடு இருக்கின்றார்கள்.

(கிஷ்தி நூஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 19, பக்கம் 13,14)

இது வியக்கத்தக்க விஷயமாகும். உலகம் முடிவுக்கு வர இருக்கின்றது. ஆனால், இந்த முழுமை பெற்ற நபியின் அருளின் ஒளிக்கதிர்கள் இதுவரை முடிவடையவில்லை. இறைவனின் வசனமான திருக்குர்ஆன் தடையாக இல்லாமல் இருந்தால் இந்த நபியைப் பற்றி மட்டும் தான் அவர் இதுவரை தமது பூத உடலுடன் வானத்தில் உயிருடன் இருக்கின்றார் என்று நம்மால் கூற முடியும். ஏனென்றால், அவர் உயிருடன் இருப்பதற்கான தெளிவான அடையாளங்களை நாம் பெற்றுள்ளோம். அவரது மார்க்கம் உயிருடன் இருக்கின்றது. அவரைப் பின்பற்றிச் செல்பவர்கள் உயிர் பெற்று விடுகின்றனர். மேலும் அவர் மூலமாக உயிருள்ள இறைவன் கிடைத்து விடுகின்றான். இறைவன் அவரையும் அவரது மார்க்கத்தையும் அவரை நேசிப்பவரையும் நேசிப்பதை நான் பார்த்துள்ளேன்.

நினைவில் கொள்ளுங்கள்! உண்மையில் அவர் உயிருடன் இருக்கின்றார். விண்ணில் எல்லாரையும் விட அவரது தகுதி மேன்மைமிக்கதாக இருக்கின்றது. ஆனால், அழிந்து போகின்ற இந்த பூத உடலுடன் அவர் இல்லை. மாறாக, என்றும் அழியாத ஒளிமிக்க உடலுடன் தமது வல்லமைமிக்க இறைவனுக்கு அருகில் வானத்தில் இருக்கின்றார்.

(ஹகீகத்துல் வஹி ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 118–119 அடிக்குறிப்பு)

மனிதனுக்கு அருளப் பெற்ற – அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப் பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியிலுள்ள கடல், ஆறு இவைகளிலுமில்லை. அது மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றுள்ளும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது, முழுமையான மனிதனிடம் அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்புக்குரியவரும் தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவர். எனவே, அவ்வொளி அவருக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் அவரின் குணயியல்புகளைச் சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இச்சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும், கல்வி கற்காத நபியும், உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது.

(ரூஹானீ கஸாயின் தொகுதி 5, ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 160–161)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad